بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

**சஹாபாக்கள் போரில் ஷஹீதாவதை அவர்களின் மன அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் காரணியாக அமையும் என்று கருதினார்கள். அவர்களுக்கு சண்டையில் ஏதாவது துன்பம் ஏற்பட்டிருந்தால் அதை துன்பமாக கருதமாட்டார்கள். மாறாக அதனை இன்பமாக கருதி வந்தார்கள்**

**பத்ர் போரில் கலந்து கொண்ட பெருமானார் (ஸல்) அவர்களது மகத்துவமிக்க சஹாபியான ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபஹைறா (ரலி) அவர்களைப் பற்றிய ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய நற்குறிப்புகள்**

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 18 ஜனவரி 2019 அன்று ஆற்றிய ஜூமுஆ பேருரையின் சுருக்கம்**

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

இன்று நான் ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபஹைறா அவர்களைப் பற்றி எடுத்துக் கூறுவேன். அவர்கள் ஆஸத் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் அயிஷா அவர்களின் தாய்வழி சகோதரரான துஃபைல் பின் அப்துல்லாஹ் பின் சஹ்பராவின் அடிமையாக இருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் தாரே அர்கமிற்கு செல்வதற்கு முன்பே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களின் ஆடுகளை மேய்த்து வந்தார்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு நிராகரிப்பாளர்களின் தரப்பிலிருந்து அன்னாருக்கு அதிகமான துன்பங்கள் கொடுக்கப்பட்டு வந்தன. ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் அன்னாரை விலைக்கு வாங்கி விடுவித்தார்கள்.

ஹிஜ்ரத் சந்தர்ப்பத்தின்போது பெருமானார் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களும் சவ்ர் குகையில் இருந்தபோது அன்னார் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் ஆடுகளை மேய்த்து வந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள், ஆடுகளை எங்களிடம் கொண்டு வாருங்கள் என்று கட்டளையிட்டிருந்தார்கள். எனவே அன்னார் நாள் முழுவதும் ஆடுகளை மேய்ப்பார்கள். மாலைப்பொழுதில் சவ்ர் குகைக்கு அருகில் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் ஆடுகளை கொண்டு செல்வார்கள். பெருமானார் (ஸல்) அவர்களும், அபூபக்ர் அவர்களும் ஆட்டுப்பாலை தாமே கரப்பார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீபக்ர் அவர்கள் பெருமானார் (ஸல்) மற்றும் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் செல்லும்போது அவர்களது கால்களின் அடையாளங்களை அழிப்பதற்காகவும், ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் மகன் எங்கே செல்கின்றார்கள் என்பது தெரியக்கூடாது என்பதற்காகவும் ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபஹைறா அவர்களும் அவர்களுக்குப் பின்னாலேயே செல்வார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களும் சவ்ர் குகையிலிருந்து வெளியேறி மதீனா நோக்கி சென்றபோது ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபஹைறா அவர்களும் அன்னாருடன் ஹிஜ்ரத் செய்தார்கள். அவர்களுக்கு வழிகாட்டக்கூடிய பனூ அதீலைச் சார்ந்த ஒரு நபர் இருந்தார். ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபஹைறா அவர்கள் பத்ர், உஹது போர்களில் பங்கு பெற்றார்கள். மேலும் பேரே மஊனா போரில் தமது 40 வயது வயதில் அன்னாருக்கு ஷஹாதத் அந்தஸ்து கிடைத்தது. ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் ஹிஜ்ரத்திற்கு முன்பாக அல்லாஹ்வின் வழியில் துன்பத்திற்குள்ளான ஏழு அடிமைகளை விடுதலை செய்தார்கள். அவர்களில் ஹஸ்ரத் பிலால் அவர்களும், ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபஹைறா அவர்களும் அடங்குவர்.

ஹிஜ்ரத் சம்பவத்தைப் பற்றி எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு நாள் நாங்கள் எங்களது வீட்டில் அமர்ந்திருந்தோம். அப்போது ஒருவர் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களிடம், பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தலையில் ஆடையை போர்த்தியவாறு வருகை தருகின்றார்கள் என்று கூறினார். இதற்கிடையில் பெருமானார் (ஸல்) அவர்கள் எங்களிடத்தில் வந்தார்கள். உள்ளே வருவதற்கு அனுமதி கேட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் அனுமதி வழங்கினார்கள். அன்னார் உள்ளே வந்து ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களிடம், எனக்கு ஹிஜ்ரத் செய்வதற்கு அனுமதி கிடைத்து விட்டது என்று கூறினார்கள்.

அதற்கு அபூபக்ர் அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னையும் உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள். எனது தாயும் தந்தையும் உங்களுக்கு அர்ப்பணமாகட்டும் என்று கூறினார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள், நீங்களும் என்னுடன் வாருங்கள் என்று கூறினார்கள். பிறகு அபூபக்ர் அவர்கள், எனது தாயும் தந்தையும் உங்களுக்கு அர்ப்பணமாகட்டும். எனது இந்த இரண்டு ஒட்டகங்களில் ஒன்றை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், நான் விலை கொடுத்து அதை வாங்குவேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் கூறுகின்றார்கள்: எனவே நாங்கள் விரைவாக இருவருக்குமுரிய பயணத்திற்கு தேவைப்படுகின்ற பொருட்களை ஆயத்தம் செய்து தோலினால் ஆன பையில் வைத்தோம். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் மகள் ஹஸ்ரத் அஸ்மா அவர்கள் ஒரு துணியை எடுத்து அந்த பையின் மேற்பகுதியை கட்டினார்கள். இதன் விளைவாக அவர்களின் பெயர் ஸாதுன் நிதாக் ஆனது.

இதற்கு பிறகு பெருமானார் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களும் சவ்ர் மலையின் ஒரு குகையை சென்றடைந்தார்கள். அங்கு மூன்று இரவுகள் மறைந்திருந்தார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபூபக்ர் இவர்கள் இருவரிடத்திலும் சென்று இரவில் தங்குவார்கள். மேலும் இரவிலேயே அவர்களிடமிருந்து சென்று விடுவார்கள். மக்காவிலேயே இரவைக் கழித்தது போல அவர்களுடனேயே காலைப்பொழுதை துவங்குவார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களும் பனூ அதீல் கோத்திரத்தைச் சார்ந்த ஒருவரை வழிகாட்டுவதற்காக பணம் கொடுத்து வைத்திருந்தார்கள். அவர் பனூ அப்தே பின் அதீயை சார்ந்தவர் ஆவார். அவர் நிராகரிக்கும் குரைஷியைச் சார்ந்தவராகவே இருந்தார். பெருமானார் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் அபூபக்ர் ஆகிய இருவரும் அந்த நபரை நம்பினார்கள். தமது பயணத்தின் ஒட்டகங்களை அவரிடத்தில் ஒப்படைத்தார்கள். மேலும் அவரிடம் மூன்று நாட்களுக்குப் பிறகு காலை நேரத்தில் அந்த ஒட்டங்களுடன் சவ்ர் குகைக்கு வந்தடைய வேண்டும் என்று வாக்குறுதி வாங்கினார்கள். ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபஹைராவும், அந்த வழிகாட்டியும் இந்த இருவருடன் சென்றார்கள். அந்த வழிகாட்டி இந்த மூவரையும் கடல் ஓரம் வழியாக இவர்களை அழைத்துச் சென்றார்.

சுராக்கா பின் மாலிக் பின் ஜோஷம் கூறி வந்தார்: எங்களிடத்தில் நிராகரிக்கும் குரைஷிகளைச் சார்ந்த உளவுபார்க்ககூடியவர் வந்தார். பெருமானார் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் ஆகிய இருவரையும் கொலை செய்பவருக்கோ அல்லது கைது செய்பவருக்கோ பரிசுத் தொகையை நிர்ணயித்தார். அப்போது நான் எனது சமுதாயமான பனூ முத்லிஜின் ஒரு சபையில் அமர்ந்திருந்தேன். அப்போது அவர்களில் ஒரு நபர் வந்து, சுராக்காவே! நான் இப்போது கடல் ஓரத்தில் சில நிழலைக் கண்டேன். மேலும் அது முஹம்மது (ஸல்) மற்றும் அவர்களுடன் இருப்பவர்களுடையதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன் என்று கூறினார்.

சுராக்கா கூறுகின்றார்: நான் சிறிது நேரத்திற்குப் பிறகு எழுந்தேன். வீட்டிற்குச் சென்று தமது அடிமைப் பெண்ணிடம், எனது குதிரையை எடுங்கள் என்று கூறினேன். அது வேகமாக என்னை அழைத்துச் சென்றது. எதுவரை என்றால் நான் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அருகில் சென்றபோது எனது குதிரை எந்த அளவுக்கு தடுமாறியது என்றால் நான் அதிலிருந்து விழுந்தேன். நான் எழுந்து நின்றேன். அம்பை எடுத்து அவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்த முடியுமா? முடியாதா? என்று சகுனம் பார்த்தேன். ஆனால் எனது எண்ணத்திற்கு எதிராகவே அது வெளிப்பட்டது. எது வெளிப்பட்டதோ அதற்கு எதிராகவே நான் செயல்பட்டேன். குதிரை வேகமாக என்னை அழைத்துச் சென்றது.

எந்த அளவுக்கு அன்னாருக்கு அருகில் என்னை கொண்டு சென்றது என்றால் நான் பெருமானார் (ஸல்) அவர்கள் திருக்குர்ஆன் ஓதக் கேட்டேன். பெருமானார் (ஸல்) அவர்கள் இங்கும் அங்கும் பார்க்கவில்லை. ஆனால் அபூபக்ர் அவர்கள் திரும்பித் திரும்பிப் பார்த்தார்கள். எனது குதிரையின் கால்கள் தரையில் புதைந்து விட்டது. இதனால் நான் கீழே விழுந்தேன். நான் மீண்டும் சகுனம் பார்த்தேன். நான் எதை விரும்பினேனோ அதற்கு எதிராகவே மீண்டும் வந்தது. அதாவது நான் பெருமானார் (ஸல்) அவர்களை பிடிக்க முடியாது என்றே வந்தது. அப்போது நான் உரத்த குரலில் பெருமானார் (ஸல்) அவர்களிடம், நீங்கள் பாதுகாப்பில் இருக்கின்றீர்கள் என்று கூறினேன். பிறகு அவர்கள் நின்று விட்டார்கள்.

அவர் கூறுகின்றார்: அவர்களை சென்றடைவதில் எனக்கு ஏற்பட்ட தடைகளைப் பார்த்து எனது உள்ளத்தில், நிச்சயமாக பெருமானார் (ஸல்) அவர்களது கூற்றே மேலோங்கி நிற்கும் என்று தோன்றியது. நான் பெருமானார் (ஸல்) அவர்களிடம், நிராகரிப்பவர்களின் அனைத்து தீய எண்ணங்களைப் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினேன். பெருமானார் (ஸல்) அவர்கள் என்னிடம், எங்களது பயணம் குறித்து நாங்கள் எந்த பாதையில் செல்கின்றோம் என்று எவருக்கும் தெரிவிக்கக் கூடாது என்று கூறினார்கள். நான் பெருமானார் (ஸல்) அவர்களிடம், தாங்கள் எனக்கு பாதுகாப்பிற்கான உத்திரவாத்தை எழுதித் தாருங்கள் என்று விண்ணப்பித்தேன். பெருமானார் (ஸல்) அவர்கள் ஆமிர் பின் ஃபஹைராவிடம் எழுதுங்கள் என்று கூறினார்கள். மேலும் அவர்கள் தோலினாலான ஒரு துண்டில் எழுதினார்கள். இதற்குப் பிறகு அன்னார் அங்கிருந்து சென்றார்கள்.

மதீனாவில் முஸ்லிம்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து வெளியேறிவிட்டார்கள் என்று செவியேற்றிருந்தார்கள். எனவே அவர்கள் ஒவ்வொரு காலையிலும் ஹர்ரா மைதானம் வரை வருவார்கள். அங்கு அன்னாருக்காக காத்திருப்பார்கள். எதுவரை என்றால் மதிய வேளையின் வெயிலானது அவர்களை திரும்பிச் செல்ல வைத்தது. அதாவது மதியம் வரை காத்திருப்பார்கள்.

ஒரு நாள் ஒரு யூதர் தமது வீட்டின் மேற்பகுதியில் ஏதோ ஒன்றை பார்ப்பதற்காக மேலே ஏறினார். அவர் பெருமானார் (ஸல்) அவர்களையும், அவர்களுடன் வந்தவர்களையும் பார்த்து விட்டார். அந்த யூதரால் தன்னை கட்டுப்படுத்திக் கொள்ள இயலாமல் உரத்த குரலில் மதீனா வாசிகளிடம், அரபு மக்களே! நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற அந்த தலைவர் இவர் தான் என்று கூறினார். இதை செவியுற்றதுமே முஸ்லிம்கள் எழுந்து தமது ஆயுதங்களை எடுத்தவாறு ஹர்ரா மைதானத்தில் பெருமானார் (ஸல்) அவர்களை வரவேற்றார்கள். அன்னார் அவர்களை தம்முடன் அழைத்துக் கொண்டு தமது வலப்பக்கத்தில் திரும்பினார்கள். மேலும் பனீ அம்ர் பின் அவ்ஃபின் முஹல்லாவில் அவர்களுடன் இறங்கினார்கள். மேலும் அது திங்கட்கிழமை நாளாகவும், ரபீவுல் அவ்வல் மாதமாகவும் இருந்தது.

பெருமானார் (ஸல்) அவர்கள் பனூ அமர் பின் அவ்ஃபின் முஹல்லாவில் பத்திற்கும் அதிகமான இரவுகளைக் கழித்தார்கள். பிறகு இறையச்சத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்ட அந்த பள்ளிவாசல் கட்டப்பட்டது. அதில் பெருமானார் (ஸல்) அவர்கள் தொழுதார்கள். பிறகு அன்னார் ஒட்டகத்தில் பயணம் செய்தார்கள். மக்கள் அன்னாருடன் நடந்து வந்தார்கள். மதீனாவில் மஸ்ஜிது நபவி பள்ளிவாசல் தற்போது இருக்கின்ற அந்த இடத்தை அடைந்ததும் ஒட்டகம் அமர்ந்து விட்டது. அன்றைய நாட்களில் சில முஸ்லிம்கள் அங்கு தொழுது வந்தனர்.

அந்த இடம் சுஹைல் மற்றும் சஹல் ஆகியோரது பேரீத்தம் பழத்தை காய வைக்கும் இடமாக இருந்தது. அன்னார் அந்த இரண்டு சிறுவர்களையும் அழைத்து அந்த இடத்தில் பள்ளிவாசல் கட்டுவதற்காக அந்த இடத்தின் தொகையை கேட்டார்கள். அதற்கு அந்த சிறுவர்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நாங்கள் இந்த இடத்தை இலவசமாக தருகிறோம் என்று கூறினர். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களிடம் அந்த நிலத்தை இலவசமாக வாங்க மறுத்து விட்டார்கள். மேலும் அவர்களிடம் அந்த நிலத்தை வாங்கி பள்ளிவாசலை கட்டினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த பள்ளிவாசலை கட்டுவதற்காக மக்களுடன் இணைந்து செங்கலை எடுத்து வந்தார்கள். செங்கலை எடுத்து வரும்போது இவ்வாறு துஆ செய்தார்கள்.

اَللّٰهُمَّ إِنَّ الْاَجْرَ اَجْرُ الْاٰخِرَةِ فَارْحَمِ الْاَنْصَارَ وَالْمُهَاجِرَ

அதாவது அல்லாஹ்வே! உண்மையான நற்கூலி மறுமையில் கிடைக்கக்கூடிய நற்கூலியே ஆகும். எனவே நீ அன்ஸார் மற்றும் முஸாஜிரீன் மீது கருணை காட்டவாயாக.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹிஜ்ரத் சம்பவம் தொடர்பாக தனக்கே உரிய பாணியில் எடுத்துக் கூறியுள்ளார்கள். அன்னார் எழுதுகின்றார்கள்:

மக்கத்து மக்கள் பெருமானார் (ஸல்) அவர்களைக் கண்டுபிடிப்பதில் தோல்வியடைந்தார்கள். எனவே அவர்கள், எவரொருவர் முஹம்மது (ஸல்) அல்லது அபூபக்ரை உயிரோடு அல்லது மரணித்தவராக கொண்டு வருவாரோ அவருக்கு நூறு ஒட்டகங்களை பரிசாக கொடுக்கப்படும் என்ற அறிவிப்பைச் செய்தனர். இந்த அறிவிப்புச் செய்தி மக்காவிற்கு அருகிலுள்ள மற்ற இதர கோத்திரத்தினருக்கும் அனுப்பப்பட்டது. எனவே காட்டரபிகளின் தலைவரான சுராக்கா பின் மாலிக் வெகுமதியின் மீது கொண்ட பேராசையில் அன்னாரை பின் தொடர்ந்தார். அன்னாரை தேடியவாறு மதீனாவின் வீதிகளில் அன்னாரை சந்தித்தார். அவன் இரண்டு ஒட்டகத்தையும், அதில் பயணம் செய்யக் கூடியவர்களையும் பார்த்து இது முஹம்மது (ஸல்) மற்றும் அன்னாருடன் இருப்பவர்களது ஒட்டகம் என்பதை அறிந்து கொண்டார். தமது குதிரையை அவர்களுக்கு பின்னால் ஓட்டிச் சென்றார். ஆனால் வழியில் அவனது குதிரை வேகமாக தடுமாறி கீழே விழுந்தது. சுராக்காவும் கீழே விழுந்தார். சுராக்கா பின் நாட்களில் முஸ்லீம் ஆனார்.

இந்த சம்பவத்தைப் பற்றி அவரே குறிப்பிடுகின்றார். ஆமிர் பின் ஃபஹைரா பெருமானார் (ஸல்) அவர்களது கூற்றிற்கேற்ப அமைதிக்கான உத்திரவாத்தை எழுதி சுராக்காவிடம் கொடுத்தபோது அல்லாஹ் சுராக்காவின் வருங்காலத்தைப் பற்றிய நிலைமைகளை பெருமானார் (ஸல்) அவர்களுக்கு வெளிப்படுத்திக் காட்டினான். அன்னார் சுராக்காவிடம், சுராக்காவே! உமது கைகளில் கிஸ்ராவின் தங்கக் காப்புகள் அணிவிக்கப்படும்போது உமது நிலை எவ்வாறிருக்கும் என்று கூறினார்கள். சுராக்கா வியப்புடன், ஈரானின் அரசர் கிஸ்ராவா? என்று கேட்க, பெருமானார் (ஸல்) அவர்கள், ஆம் என்று பதிலளித்தார்கள். அன்னாரது இந்த முன்னறிவிப்பு 16,17 வருடங்களுக்குப் பிறகு சொல்லுக்கு சொல் நிறைவேறியது. சுராக்கா முஸ்லிமாகி மதீனா வந்தார்.

முஸ்லிம்களின் கண்ணியம் வளர்ந்து கொண்டிருப்பதைக் கண்ட ஈரானைச் சார்ந்தவர்கள் முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுக்க ஆரம்பித்தனர். அவர்கள் இஸ்லாத்தை நசுக்குவதற்கு பகரமாக தாமே இஸ்லாத்திற்கு எதிரில் நசுக்கப்பட்டனர். ஈரானைச் சார்ந்தவர்கள் தாக்குதலை ஆரம்பித்தனர். இறுதியாக கிஸ்ராவின் ஆட்சி முஸ்லிம் படைகளின் முன் வீழ்ந்தது. மேலும் ஈரான் நாட்டின் கருவூலங்கள் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்தன. ஈரானிய அரசாங்கத்தின் எந்தக் கருவூலங்கள் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்ததோ அதில் ஈரானின் அரசர் கிஸ்ரா அரியணையில் அமரும்போது தமது மரபிற்கேற்ப அணியக்கூடிய அந்த தங்கக் காப்பும் இருந்தது.

ஹஸ்ரத் உமர் அவர்களுக்கு முன்னால் போச் செல்வங்கள் கொண்டு வரப்பட்டு வைக்கப்பட்டன. அப்போது கிஸ்ராவின் தங்கக் காப்பை பார்த்ததும் ஹஸ்ரத் உமர் அவர்களுக்கு, அந்த பலவீனமான நேரத்தில் இறைவனது தூதருக்கு தனது நாட்டை விட்டு மதீனா செல்ல நேரிட்டது, மேலும் சுராக்கா அன்னாரை கொன்றோ அல்லது உயிரோடு பிடித்தோ மக்கத்து மக்களிடம் ஒப்படைத்து நூறு ஒட்டகத்தை பரிசாகப் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் குதிரையை வேகமாக ஓட்டியது, அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள், சுராக்கா! உமது கைகளில் கிஸ்ராவின் தங்கக் காப்புகள் அணிவிக்கப்படும்போது உமது நிலை எவ்வாறிருக்கும் என்று கூறியது ஆகிய அந்த அனைத்து சம்பவங்களும் கண் முன்னே வந்தது.

இது எத்தகைய மிகப்பெரிய முன்னறிவிப்பு. ஹஸ்ரத் உமர் அவர்கள் தமக்கு முன்னால் கிஸ்ராவின் காப்புகளை கண்டபோது இறைவனது வல்லமை மீண்டும் அவர்களது கண்களுக்கு முன்னால் வந்தது. அவர்கள் சுராக்காவை அழையுங்கள் என்று கூறினார்கள். சுராக்கா அழைக்கப்பட்டார். ஹஸ்ரத் உமர் அவர்கள், கிஸ்ராவின் தங்கக் காப்புகளை தமது கைகளில் அணியுமாறு கட்டளையிட்டார்கள். அதற்கு சுராக்கா, இறைவனது தூதரின் கலீஃபாவே! தங்கம் அணிவது முஸ்லிம்களுக்கு தடுக்கப்பட்டதாகும் என்று கூறினார்கள். அதற்கு உமர் அவர்கள், அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உங்களது கையில் தங்கக் காப்புகளைக் காட்டினான். நீங்கள் இந்த தங்கக் காப்புகளை அணிகின்றீர்களா? அல்லது நான் உங்களுக்கு தண்டனை தரட்டுமா? ஏனென்றால் தற்போது இந்த முன்னறிவிப்பு நிறைவேறியுள்ளது. இப்போது இதன் எஞ்சிய பகுதியையும் நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று கூறினார்கள். எனவே சுராக்கா தமது கையில் அந்த தங்கக் காப்பை அணிந்தார்கள். மேலும் முஸ்லிம்கள் இந்த வியக்கத்தக்க முன்னறிவிப்பு முழுமையானதை தமது கண்களால் கண்டார்கள்.

ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபஹைரா ஹிஜ்ரத் செய்து மதீனா வந்தார்கள். மதீனா வந்த பிறகு அவர்களும், ஹஸ்ரத் அபூபக்ர் மற்றும் ஹஸ்ரத் பிலால் ஆகியோரும் நோயுற்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களது ஆரோக்கியத்திற்காக துஆ செய்தார்கள். ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் அவர்களை நலம் விசாரிக்கச் செல்வதற்கு பெருமானார் (ஸல்) அவர்களிடம் அனுமதி வேண்டினார்கள். அன்னார் அனுமதி வழங்கினார்கள். ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் திரும்பி வந்து அந்த சஹாபாக்களின் நிலைமைகள் மற்றும் எண்ணங்களை எடுத்துக் கூறினார்கள். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் வானத்தைப் பார்த்தார்கள். மேலும் இவ்வாறு தஆ செய்தார்கள்:

اَللّٰهُمَّ حَبِّبْ اِلَيْنَا الْمَدِيْنَةَ كَمَا حَبَّبْتَ اِلَيْنَا مَكَّةَ واشد- اَللّٰهُمَّ بَارِكْ لَنَا فِيْ صَاعِهَا وَفِيْ مُدِّهَا وَانْقُلْ وَبَاهَا اِلٰى مَا يعا

அதாவது அல்லாஹ்வே! மக்காவை எங்களுக்கு பிடித்தமானதாக ஆக்கியது போன்று மதீனாவையும் நீ ஆக்குவாயாக. மேலும் அதை விட அதிகமாக ஆக்குவாயாக. அல்லாஹ்வே! இதிலுள்ள சாஹ் மற்றும் மத்தில் எங்களுக்கு பரக்கத் செய்வாயாக. (இது ஓர் அளவாகும்) மேலும் மதீனாவை எங்களுக்கு ஆரோக்கியத்திற்குரிய இடமாக ஆக்குவாயாக. மேலும் இந்த நோயை எங்களை விட்டும் தொலைவில் எடுத்துச் செல்வாயாக.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபஹைரா பேரே மஊனா சம்பவத்தில் ஷஹீதானார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் ஆமர் பின் ஃபஹைராவின் ஷஹாதத் சம்பவத்தைப் பற்றி எடுத்துக் கூறியவாறு எழுதுகின்றார்கள்: இஸ்லாம் வாளின் பலவந்தத்தால் வெற்றி பெறவில்லை. மாறாக, இஸ்லாம் உள்ளத்தில் இறங்கிக் கொண்டே செல்கின்ற உயர்ந்த போதனைகள் மற்றும் நல்லொழுக்கத்தில் ஓர் உயர்தரமான மாற்றத்தை உருவாக்கி விடுகின்ற போதனைகளின் மூலமாகவுமே வெற்றி பெற்றது.

ஒரு சஹாபி கூறுகின்றார்: நான் முஸ்லிமாவதற்கான காரணம் என்னவென்றால், முஸ்லிம்களை ஏமாற்றி 70 காரிகளை ஷஹீதாக்கிய அந்த சமுதாயத்தில் விருந்தாளியாக நான் தங்கியிருந்தேன். இறுதியில் ஒரே ஒரு சஹாபி மட்டுமே எஞ்சியிருந்தார். அவரின் பெயர் ஆமிர் பின் ஃபஹைரா ஆகும்.

அதிகமான மக்கள் இணைந்து அவரை பிடித்தார்கள். ஒரு நபர் வேகமாக அவர்களது நெஞ்சில் வாளால் தாக்கினார். வாள் பட்டவுடன் அவரது நாவிலிருந்து, ஃபுஸ்து வ ரப்பில் கஃபா அதாவது கஃபாவின் இறைவன் மீது ஆணையாக! நான் வெற்றி பெற்று விட்டேன் என்ற வார்த்தை வெளிவந்தது. அவரது நாவிலிருந்து இந்த வார்த்தையை கேட்டபோது நான் வியப்படைந்தேன். நான் கூறினேன்: இந்த நபர் தனது உறவினர்களை விட்டும், மனைவி மக்களை விட்டும் தொலைவில் இருக்கின்றார். இவ்வளவு பெரிய துன்பம் அவரை வந்தடைந்துள்ளது. மேலும் வாளால் அவரது நெஞ்சில் தாக்கப்பட்டது. ஆனால் அவர் மரணிக்கும்போது கூட, கஃபாவின் இறைவன் மீது ஆணையாக! நான் வெற்றி பெற்று விட்டேன் என்றே கூறுகிறார். இது எனது இயல்பில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால், நான் இவர்களது தலைமையகத்திற்கு சென்று பார்ப்பேன். மேலும் சுயமே இந்த மக்களின் மார்க்கத்தைப் பற்றி படிப்பேன் என்று முடிவு செய்தேன். எனவே நான் மதீனா சென்றேன். பிறகு முஸ்லீமானேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது கூறுகின்றார்கள்: சஹாபாக்கள் போரில் ஷஹீதாவதை அவர்களின் மன அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் காரணியாக அமையும் என்று கருதினார்கள். அவர்களுக்கு சண்டையில் ஏதாவது துன்பம் ஏற்பட்டிருந்தால் அதை துன்பமாக கருதமாட்டார்கள். மாறாக அதனை இன்பமாக கருதி வந்தார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அம்மக்கள் மிகவும் நற்பேறு பெற்ற மக்கள் ஆவர். குறிப்பாக ஆமிர் பின் ஃபஹைரா அவர்களுக்கு ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களுக்கு தொண்டு செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தது. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தொண்டு செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தது. அன்னாரோடு ஹிஜ்ரத் செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தது. அன்னார் எல்லா சந்தர்ப்பத்தில் பற்றை வெளிப்படுத்தினார்கள். அல்லாஹ் அன்னாரது அந்தஸ்தை உயர்த்திக் கொண்டே செல்வானாக.

**மொழியாக்கம்: A.கலீல் அஹ்மது**